முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.01.2024,** வியாழக்கிழமை

1. கருணைமிகுந்த ஆறுமுக ஞானியே
கந்த வேலன் சக்தியாக வந்த
ஆறுமுக அரங்கமகா தவசியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சிலை திங்கள்
குறைவிலா மூவாறோர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 19 ம் நாள், 04.01.2024, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க கண்ணிச்சித்தர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயர்வை தரும் மகா சக்தியாக
ஞானமருளும் அரங்கமகான் வழி
ஞாலமதில் கடைத்தேற்றும் சிறந்தவழி
4. வழிதனை வணங்கி மக்கள்
வழிமொழிந்து ஏற்று வர
அழிவென்பதில்லா ஞானவானாக
ஆற்றல் மிக்க ஞானிகளாக
5. ஆகவே மக்களிடை தேற்றம்
அனுகி உலக மாற்றமதும்
வகைபட சடுதி காண்கும்
வந்தடையும் வானவர்கள் போற்ற
6. போற்ற வளர்ச்சிக் கொண்ட
புண்ணியம் நிறைந்த பூமியாக
ஆற்றல் மிகுந்த ஞானவான்கள்
ஆறுமுகப்பெருமான் தலைமை

7. தலைமையை ஏற்ற மக்களாக
தனிப்பெருங்கருணை வடிவான
தலைமை கொண்ட ஞான ஆட்சி
தரணியெங்கிலும் உருவாகி இனிதே

8. உருவாகி சமூக நடப்பு அவலம்
உலகை விட்டு ஒழியும்
குருவாக அரங்கன் வழிநடத்தி
குவலயம் சுத்தி ஆகும்

9. ஆகவே பிரணவக் குடிலை
அனைவரும் அனுகித் தேடி
வகைபட அன்னமிட உதவி
வரமாகத் தரும் அரங்கன் கரம்வழி

10. கரம்வழி வரும் ஞான தீட்சை
கட்டாயம் மக்கள் பெற்றுவர
திறம்பட நித்ய பூசைகளாக
தொடர்ந்து தெய்வ நிலைகூடி

11. கூடியே உலக மாற்றம்தான்
குருவரங்கனால் சடுதி நடக்கும்
இடர்களெல்லாம் விலகி சடுதி
இந்த உலகம் ஞான உலகமாகும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–